# தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# (DAY - NULM) தீன்தயாள் அந்யோதயா யோஜனா - தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம்

அ) நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள (DAY - NULM) தீன்தயாள் அந்யோதயா யோஜனா - தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் செயல் திறன் - செயல்பாடுகள் குறித்து விளக்கவும்.

ஆ) இந்த 2022 - 2023 ஆண்டுக்கான வரவு செலவு கணக்கில் மேற்கூறிய திட்டத்திற்காக ரூபாய். 450 கோடி ஒதுக்கப்பட்டும் ரூபாய் 275 கோடி மட்டுமே ஒதுக்கியதாக தெரியவந்துள்ளது. அதை குறைத்ததற்கான காரணம் என்ன?

இ) மாநிலங்கள் வாரியாக இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவு? மற்றும்

ஈ) இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டில் கவனம் செலுத்தும் பகுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

**<u>மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் திரு. கௌஷல் கிஷோர் பதில்</u>**

அ) தீன்தயாள் அந்யோதயா யோஜனா - தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டமானது, நிலையான அடிப்படை நகர்புற ஏழை குடும்பங்களின் வறுமை மற்றும் பாதிப்பை குறைக்கும் வகையில் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகார அமைச்சகம் மத்திய அரசின் நிதி உதவி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து 1,451 லட்சம் நகர்புற ஏழைகளுக்கு,

அவர்களின் வேலை வாய்ப்பை மேம்படுத்த, திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 7.71 லட்சம் பேர் சுயம் மற்றும்/ அல்லது கூலி வேலை வாய்ப்பின் கீழ் பயனடைந்து வருகின்றனர். தனியார் அல்லது குழு குறுந்தொழில் மூலம் சுய வேலை வாய்ப்புக்காக 8.34 லட்சம் பயனாளிகளுக்கு வட்டி மானியத்துடன் கூடிய கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 8.34 லட்சம் சுய உதவி குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 5.91 லட்சம் சுய உதவி குழுக்களுக்கு, சுழல் நிதி மற்றும் 7.64 லட்சம் கடன்கள் மீதான வருமானத்தை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான, SHG வங்கி இணைப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. தெருவோர விற்பனையாளர்கள் கணக்கெடுப்பானது 3,467 நகரங்களில் நிறைவடைந்துள்ளது. அதில், 53.76 லட்சம் தெருவோர வியாபாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில் 30.99 லட்சம் தெருவோர தருவர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற வீடற்றவர்களுக்காக அனுமதிக்கப்பட்ட 2,544 தங்குமிடங்களில், 1,855 தங்குமிடங்கள் செயல்படுகின்றன.

ஆ) மத்திய அரசின் இது போன்ற திட்டத்திற்காக, மாநில அரசுகளுக்கு அளிக்கப்படும் SNA கணக்கிலிருந்து, இந்தப் பணியை செயல்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

இ) 01/04/2014 முதல் 30/06/2023 வரை, இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாநிலம்/ யூனியன் பிரதேசங்கள் வாரியாக (SHG) சுய உதவி குழுக்களின் எண்ணிக்கை இணைப்பு 1-ல் உள்ளது.

ஈ) இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களானது, தொழிலாளர்கள், விவசாயம், உணவு பதப்படுத்துதல், கைவினைப் பொருட்கள், ஆடைகள், போன்ற 40க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளின் கீழ் இயங்குகிறது.

**<u>இணைப்பு - 1</u>**

01/04/2014 முதல் 30/01/2023 வரை, தீன்தயாள் அந்தியோதயா யோஜனா - தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சுய உதவி குழுக்களிள் எண்ணிக்கை, மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் வாரியாக.

1) அந்தமான் & நிக்கோபார் தீவுகள் - 116
2) ஆந்திர பிரதேசம் - 84115
3) அருணாச்சல பிரதேசம் - 634
4) அசாம் - 19322
5) பீகார் - 32658
6) சண்டிகர் - 522
7) சத்தீஸ்கர் - 33454
8) டெல்லி - 1057
9) கோவா - 749
10) குஜராத் - 37123
11) ஹரியானா - 7456
12) இமாச்சல பிரதேசம் - 4340
13) ஜம்மு & காஷ்மீர் - 3543
14) ஜார்கண்ட் - 19778
15) கர்நாடகா - 29920
16) கேரளா - 24891
17) லடாக் - 36
18) மத்திய பிரதேசம் - 55872
19) மகாராஷ்டிரா - 94567
20) மணிப்பூர் - 3270
21) மேகாலயா - 399
22)மிசோரம் - 1323
23) நாகலாந்து - 597
24) ஒடிசா - 37858
25) புதுச்சேரி - 925
26) பஞ்சாப் - 9666
27) ராஜஸ்தான் - 31593
28) சிக்கிம் - 90
29) தமிழ்நாடு - 122516
30) தெலங்கானா - 45950
31) திரிபுரா - 4040
32) உத்திர பிரதேசம் - 60777
33) உத்தரகாண்ட் - 3411
34) மேற்குவங்கம் - 61905

மொத்தம் - 8,34,473

******